


**04.10. 2024**

## தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லியில் கவுடில்ய பொருளாதார மாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றுமாலை உரையாற்றுகிறார்.

2. செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க தொழில்துறையினர் முன்வர வேண்டுமென்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. திருப்பதி லட்டு கலப்பட விவகாரம் குறித்து ஆராய சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

4. தமிழ்நாட்டில் நீர்வளத்துறை சார்பில் 83 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்துள்ளார்.

5. ஷாங்காய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் ரோஹன் போப்பண்ணா, குரோஷியா இணை வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

கவுடில்ய மாநாடு - நிர்மலா

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் கவுடில்ய பொருளாதார மாநாட்டில் இன்றுமாலை உரையாற்றுகிறார்.

முன்னதாக இன்று காலை இம்மாநட்டில் உரையாற்றிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், உள்நாட்டு திறனை இந்தியா மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சி, சந்தை வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் என்று கூறியஅவர், படைப்பாற்றல் திறனில் இந்தியா சராசரிக்கும் மேலாக வளர்ந்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

நிதி மேலாண் முறைகள், திறமையாக கையாளப்படுவதாக கூறியஅவர், உலகளாவிய புவி அரசியல் சூழல்களில் இந்தியா முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

சுதந்திர நூற்றாண்டு பாதையில் ஏழை எளிய மக்கள், மகளிர் இளையோர், விவசாயிகள் முக்கிய பங்குதாரர்களாக செயலாற்றுவார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

**புவி மற்றும் சமூக பிரச்சனைகளுக்கு ஆன்மீகத்தின் மூலம்** தீர்வுகாண முடியும் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் தூய்மையான ஆரோக்கியமான சமூகத்திற்கு ஆன்மீகம் என்ற தலைப்பிலான உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், உலகின் பல்வேறு பகுதிகளில் மனிதநேய மதிப்பீடுகள் குறையும் போது, அமைதி, ஒற்றுமையின் முக்கியத்துவம் அதிகரிப்பதாக குறிப்பிட்டார்

காலநிலை மாற்றம், சுற்றுசூழல் மாசுவால் பாதிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில், இச்சவாலை எதிர்கொள்ள அன்னையின் பெயரில் மரம் நடுவோம் இயக்கத்தின் கீழ், அரசுடன் இணைந்து மரக்கன்றுகளை நட மக்களை அவர் அறிவுறுத்தினார்

அனைத்து கலாச்சாரங்களிலும் தூய்மைக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய குடியரசு தலைவர், இயற்கை வேளாண்மை தூய்மையான உணவை உறுதிசெய்யும் என்றார்.

❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு, உள்ளிட்டவற்றில் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தொழில்துறையினர் மேற்கொள்ள வேண்டுமென்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய பாதுகாப்பு தளவாட உற்பத்தியாளர்கள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இத்துறையில் புதுமையான சிந்தனைகளை வெளிப்படுத்தினால் அரசு உரிய ஆதரவு வழங்கும் என்று உறுதியளித்தார்.

தொழில்நுட்ப பரிவர்த்தனைகளில், தொழில் துறையினருக்கு முக்கிய பங்கிருப்பதாக கூறிய அமைச்சர், இதுதொடர்பான நடவடிக்கைகளை தொழில்துறையினர் முனைப்புடன் மேற்கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள், இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வழிமுறைகளை உறுதி செய்ய இந்திய தளவாட உற்பத்தியாளர்கள் செயலாற்ற வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

திரு. ராஜ்நாத் சிங் இந்தோ பசிபிக் பிராந்திய பேச்சுவார்த்தைகளில் இன்றுமாலை புதுதில்லியில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖

திருப்பதி லட்டு

திருமலை திருப்பதி கோவிலில் பிரசாத லட்டு தயாரிப்பில், கலப்பட நெய் கலக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

இக்குழுவில் 2 சி.பி.ஐ அதிகாரிகள், 2 ஆந்திர மாநில காவல்துறை அதிகாரிகள், உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தின் மூத்த அதிகாரிகள் இடம்பெறுவார்கள்.

சி.பி.ஐ. இயக்குநர் இந்த விசாரணை கண்காணிக்கவும் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

இவ்வழக்கு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், கோடிக்கணக்கான பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பிளிக்கும் வகையிலேயே நீதிமன்றம் இந்த புலனாய்வு குழுவை அமைத்துள்ளதாக கூறியுள்ளது.

இப்பிரச்சனை அரசியல் கலக்கக்கூடாது என்று நீதிமன்றம் விரும்புவதாக பி.ஆர். கவாய் தலைமையிலான நீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

ஹரியானா தேர்தல்

**ஹரியானாவில் 90 சட்டப்பேரவை** தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நாளை நடைபெறும் வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன

101 பெண்கள் உட்பட ஆயிரத்து 31 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதில் 464 பேர் சுயேட்சைகள்.

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை வரும் 8 ஆம் தேதி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

சென்னை மெட்ரோ ரயில்

**சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்திற்கும் மத்திய** அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதற்காக பிரதமருக்கு, மத்திய தகவல்

ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், தமிழக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்

சென்னை மெட்ரோ 2-ம் கட்ட திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியதற்காக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினும் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தமிழக மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

திருச்சி, திருப்பூர், காஞ்சிபுரம், திண்டுக்கல், உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 83 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட 19 திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் திறந்துவைத்தார்.

ஒருகால பூஜை திட்ட திருக்கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் குழந்தைகளின் மேற்படிப்பிற்காக கல்வி உதவித்தொகையாக 500 மாணாக்கருக்கு மொத்தம் 50 லட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

2023ம் ஆண்டிற்கான கலைஞர் கலைத்துறை வித்தகர் விருதுகளை, பழம்பெரும் பின்னணி பாடகி பி.சுசீலா மற்றும் கவிஞர் மு.மேத்தாவிற்கு இன்று வழங்கி கௌரவித்தார்.

❖❖❖❖❖❖

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பருவமழை தொடங்குவதற்கு முன்பே அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை நிறைவேற்ற அறிவுறுத்தப்பட்டு உள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு போன்ற காய்ச்சல்களை கட்டுப்படுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மழைக்காலம் நெருங்குவதால் சுகாதாரம் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் இணைந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு, காய்ச்சல் முகாம்களையும் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

ராமதாஸ்

தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடைபெற தேவையான நடவடிக்கைகளை, தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று பா.ம.க நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுதொடர்பான வழக்கை உச்சநீதிமன்றத்தில் விரைவாக விசாரணைக்கு கொண்டுவர அவர் கோரியுள்ளார்.

தகுந்த காரணங்களை முன்வைத்து, சட்டப்பூர்வமாக, ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖

சத்யபிரத சாகு

**தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு** முகாம் அடுத்தமாதம் 4 நாட்கள் நடத்தப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாகு எழுதியுள்ள கடிதத்தில், அடுத்த மாதம் 9, 10, 23, 24 தேதிகளில் நடைபெறும் இம்முகாமிற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖

சுதந்திர போராட்ட வீரர்கள்

**சுதந்திர போராட்ட வீரர் சுப்ரமணிய சிவாவின்** 141-வது பிறந்தநாளை ஒட்டி தர்மபுரி மாவட்டம் பாப்பாரப் பட்டியில் அன்னாரது நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்

**அதேபோல்** சுதந்திர போராட்ட வீரர் கொடிகாத்த குமரனின் பிறந்தநாளை ஒட்டி அவரது சொந்த ஊரான சென்னிமலையில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ராஜகோபால் சுன்கரா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖

கூடன்குளம்

**கூடன்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது** அணுஉலையில் மின் உற்பத்தி இன்று மீண்டும் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

அஞ்சல்துறை தலைவர்

**நவராத்திரியை** முன்னிட்டு, திருச்சி மத்திய மண்டல அஞ்சல்துறை சார்பில், தலைமை தபால் நிலையத்தில், அஞ்சல் சேவையை எடுத்துரைக்கும் வகையில், **கொலு கண்காட்சி** இடம்பெற்றுள்ளதாக இதன் தலைவர் **திருமதி. நிர்மலா தேவி** தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**தோவாளை**

நவராத்தியையொட்டி, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர்ச் சந்தையில், பூக்களின் விலை பெருமளவு அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக** தமிழ்நாட்டில் பரவலாக அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக **சென்னை** வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருச்சி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖

முதலமைச்சர் கோப்பை போட்டிகள்

**சென்னை நேரு உள்விளையாட்டரங்கில்** மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

தடகளம், கால்பந்து, உள்ளிட்ட 25 வகையான போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணாக்கர், பொதுப்பிரிவினர், மாற்றுத் திறனாளிகள், அரசு ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஷாங்காய் ஓப்பன் டென்னிஸ்** ஆடவர் இரட்டையர் ஆட்டத்தில் ரோஹன் போப்பண்ணா, குரோஷியா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் போப்பண்ணா இணை - ஸ்பெயின் இணையை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**துபாயில் நடைபெறும் ஐ.சி.சி மகளிர்** உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் இன்றிரவு ஏழரை மணிக்கு இந்தியா நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

ஹர்மன் பிரீத் கவுர் தலைமையில் இந்திய அணியும்,

ஷோபி டிவைன் தலைமையில் நியூசிலாந்தும் களமிறங்குகின்றன.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**